செய்தி வெளியீடு எண்:083 நாள் : 06.02.2016

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி

## மின் இணைப்பில் இருந்த கைப்பேசி வெடித்ததால் தனுஷ் என்ற சிறுவனுக்கு ஏற்பட்ட கண்பார்வை குறைபாடு ஒரே நாளில் சரிசெய்யப்பட்டது. முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் சிகிச்சை

செங்கல்பட்டைச் சார்ந்த தனுஷ் என்ற 9 வயது சிறுவன் 29.01.2016 அன்று மின் இணைப்பில் இருந்த கைப்பேசியை உபயோகித்ததால் அது வெடித்து சிறுவனடைய இருகண்களும் பாதிப்புக்குள்ளானது. உடனடியாக சிறுவன் 108 ஆம்புலன்ஸ் மூலம் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டான். பின்னர் மேல் சிகிச்சைக்காக அச்சிறுவன் சென்னை கீழ்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்பட்டு, பின்னர் 30.01.2016 அன்று உயர் சிகிச்சைக்காக எழும்பூர் அரசு கண் மருத்துவமனையில் அதிகாலை அனுமதிக்கப்பட்டான். அச்சிறுவனை பரிசோதித்த மருத்துவர்கள் சிறுவனுடைய வலது கண்ணின் கருவிழியில் காயம் அடைந்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டு கண்தானம் மூலம் பெறப்பட்ட கருவிழி அச்சிறுவனுக்கு உடனடியாக பொறுத்தப்பட்டது. தற்போது சிறுவனுக்கு வலது கண்ணில் பார்வையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மேலும், வலது கண் இமையில் ஏற்பட்ட காயமும் சரிசெய்யப்பட்டடு, இடது கண்ணில் கிழிந்திருந்த வெள்ளைப்படலமும் சரிசெய்யப்பட்டது. வலது கண்ணில் புரை இருப்பதினால் அதற்கான மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. காயத்தினால் ஏற்பட்ட புரை நீக்கிய பின் வலது கண்ணிலும் பார்வையில் முன்னேற்றம் ஏற்படும் என மருத்துவர்கள் கூறினார்கள்.

உடனடியாக மருத்துவ சிகிச்சை அளித்து சிறுவனுடைய பார்வை குறைபாட்டை நீக்க உதவிய **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களுக்கு சிறுவனுடைய பெற்றோர்கள் தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9